முன்னிலை : திரு. பா. சரவணன், பி.எஸ்.சி.பி.எல்.,

சார்பு நீதிபதி, பெருந்துறை.

| |
|---|
| OS 108/16 |
| பி.சா.1( கண்ணம்மாள்) |
| நாள் 14.08.19 |

1969ம் ஆண்டின் 54 வது சட்டப் பிரிவு 5(2) ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு ஓரளவு எழுத படிக்கத் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரரைண பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகள் தெரியும். நான் எதிர்வழக்குரையுடன் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. பி.சா.ஆ 1 முதல் 10 வரையான ஆவணங்களை தற்போது கால தாமதமாக தாக்கல் செய்ததற்கு காரணம் சொத்து சம்பந்தமான விவரம் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது தெரியாது என்பதால் தான் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் இல்லாத சங்கதிகளை முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ 8, 9 சம்பந்தமாக விவரம் பற்றி எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் தெரியாது. பி.சா.ஆ 8 வழக்கு யாரால் எதற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பழனியப்பன் தாக்கல் செய்தார். பி.சா.ஆ 8 ல் கண்ட வழக்கை பழனியப்பன் பாகப்பிரிவினைக்காக கண்ணம்மாளுக்கு எதிராக தாக்கல் செய்தார். தாவா சொத்து உள்ள ஒழுங்குபாறை எனது மாமனார் ஊர் ஆகும். பி.சா.ஆ 8 தாவா தாக்கல் செய்துள்ள வாதி பழனிசாமி வெளியூர் காரர் என்றால் சரியல்ல. அவரும் உள்ளூர் தான். என் மாமனார் ராமசாமி. தாவா சொத்து என் மாமனாருக்கு பூர்வீகம். அவர் அப்பா வாங்கியதாகும். பொதுவாக ஒரு சொத்தை 3ம் நபர் வந்து அனுபவிக்க கிராமத்தில் விடமாட்டார்கள் என்றால் சரி. முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4 ல் வேறு காரணங்களுக்காக ராமசாமி அவர் மகளுக்கு எழுதிய தான செட்டில்மெண்ட் பத்திரம் நடைமுறை படுத்தப்படவில்லை என்று கூறியுள்ளேன். அந்த வேறு காரணம் என்னவென்றால் நானும் ஜெயலட்சுமியும் ஆளுக்கு பாதியாக பாகம் செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்ததால் அந்த செடடில்மெண்டை நடைமுறைபடுத்தவில்லை.

(வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Uploaded by

SS